
|| श्रीः ||

ஸ்ரீ ரங்கேஶாய நம:

# ஸ்ரீ ரங்கம் ரங்கநாத ஸ்வாமி மந்திரத்தின் (ஆலயத்தின்) ஸப்த ப்ரகார ப்ரதிக்‌ஷின விதி



**ஸ்ரீ ரங்கம் நாராயண ஆசார்யிரின்**

*உக்ர ரத ஸாந்தியில்*

*இது இலவஸமாக வெளியிடப்பட்டது*

|| ஶ்ரீரங்கநாதாய நம: ||

# || ஸப்த ப்ரகார ப்ரதக்ஷின விதி: ||

கருட புராணத்தின்படி, ரங்கநாதனின் ப்ரதக்ஷிணை விதி. இது கருட ப்ரஹ்ம ஸம்பாஷணை ரூபத்தில் உள்ளது.

गरुड उवाच

भगवन्सर्वलकेश कृपालो कमलासन ।

श्रुतं मया त्वन्मुखाब्जात्तीर्थानां वैभवं शुभम् ॥१

पुनरेव तु पृच्छामि प्रदक्षिणविधिं विधे ।

கருட உவாச -

ப[4]க[3]வன் ஸர்வலோகேஶ க்ருபாலோ கமலாஸன ।

ஸ்ருதம் மயா த்வன்முகா[2]ப்[3]ஜாத் தீர்த்தா[2]னாம் வைப[4]வம் ஶுபம்|| 1

புனரேவ து ப்ருச்சா[2]மி ப்ரத[3]க்ஷிணவிதி[4]ம் விதே[4]।

(ஹே க்ருபாளோ) கருணாமூர்த்தியான தாங்கள் (ஹே கமலாஸன;) கமலபுஷ்பத்தில் வீற்றிருப்பவரான தாங்கள் (ஹே ஸர்வலோகேஶ) ஸர்வ லோகங்களுக்கும் ஸ்வாமியான தாங்கள் (ஹே பகவன்) பகவானான தாங்கள் (த்வன் முகாப்ஜாத்) உங்கள் தாமரை போன்ற முகத்திலிருந்து (தீர்த்தானாம் வைபவம்) ஸகல புண்ய தீர்த்தங்களின் விஶேஷ ஞானத்தையும், அதன் மஹாத்ம்யத்தையும் (ஶுபம்) அந்த தீர்த்தங்கள் தரும் ஶுப பலன்களையும் (மயா ஸ்ருதம்) என்னால் கேட்கப்பட்டது. அதாவது, இவ்வாறு ஶ்ரீரங்கத்தின் காவேரியின் மஹாத்ம்யமும், சந்த்ர புஷ்கரிணியின் மஹாத்ம்யமும், மற்றும் இதர தீர்த்தங்களின் மஹாத்ம்யங்களும், ப்ரஹ்மன் கூற கருடன் கேட்டதாக இங்கு அறிய வேண்டும். அந்த கருடன் (புனரேவது ப்ருச்சாமி) நான் உங்களை மீண்டும் கேட்கிறேன். இந்த ரங்கநாதனின் (ப்ரதக்ஷிண விதிம்) ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணை

எனப்படும், ப்ரதக்ஷிணா ரூபமாக செய்யப்படும் உபாசனையை (விதே) எனக்கு கூறி அருள்வீராக.

ब्रह्मोवाच
विष्णुवाह प्रवक्ष्यामि शृणु रंगेशवैभवम् ।। २
विमानं रंगनाथस्य माहात्म्यं च तथा शृणु ।
कावेर्या मध्यभागे तु चंद्रपुष्करिणीतटे ।। ३

ப்ரஹ்மோவாச
விஷ்ணுவாஹ ப்ரவக்ஷ்யாமி ஶ்ருணு ரங்கேஶவைப$^4$வம்|| 2
விமானம் ரங்க$^3$நாத$^2$ஸ்ய மாஹாத்ம்யம் ச ததா$^2$ ஶ்ருணு|
காவேர்யா மத்$^4$யபா$^4$கே$^3$ து சந்த்$^3$ரபுஷ்கரிணீதடே || 3

ப்ரஹ்மோவாச:
ப்ரம்ஹா கூறியது.

(விஷ்ணுவாஹ) விஷ்ணுவின் மகிமையை கூறுவதான (ரங்கேஶ வைபவம்) ஸ்ரீரங்கத்தின் நாயகனான அந்த ஸ்ரீரங்கநாதனின் மஹா மஹிமையை கூறும் விஷயங்களை (ப்ரவக்ஷ்யாமி) நன்றாகக் கூறுகிறேன் (ஸ்ருணு) நீ கேட்பாயாக. (ச) மற்றும் (ரங்கநாதஸ்ய விமானம்) ரங்கநாதனின் ரங்க விமானத்தின் (மாஹாத்ம்யம்) மகிமையையும் (ததா) அவ்வாறே (ப்ரவக்ஷ்யாமி) கூறுகிறேன் (ஸ்ருணு) நீ கேட்பாயாக. அந்த ஸ்ரீரங்கம் என்னும் ரங்கநாத க்ஷேத்திரம் எங்கிருக்கிறது என்று கேட்டால், (காவேர்யா மத்யபாகே) இரு புறமும் காவேரி நதி ஓடுவதாக அந்த க்ஷேத்திரமானது உள்ளது (து) மற்றும் (சந்த்ர புஷ்கரிணி தடே) ப்ரஸித்தமான சந்த்ர புஷ்கரிணி என்னும் தீர்த்த ஸ்தானத்தின் கரையில் உள்ளது.

चतुर्दिशं चतुर्द्वारं तस्य देवालयस्य च ।
आभिमुख्ये रंगधाम्न द्वारमेकं विशिष्यते ।। ४

சதுர்தி³ஶம் சதுர்த்³வாரம் தஸ்ய தே³வாலயஸ்ய ச ।
ஆப⁴முக்²யே ரங்க³தா⁴ம்னோ த்³வாரமேகம் விஶிஷ்யதே।।4

(தஸ்ய) அந்த ரங்கநாதனுடைய (தேவாலயஸ்ய) தேவாலயமானது (சதுர்திசம்) நான்கு திக்கிலும் பரவியுள்ளது (ச) மற்றும் (சதுர்த்வாரம்) நான்கு திக்கிலும் நான்கு வாயில்களைக் கொண்டது. (த்வாரமேகம்) இந்த நான்கு த்வாரத்தில் ஒன்றான, தக்ஷிண த்வாரமானது (ஆபமுக்யே) ரங்கநாதனை அபமுகமாக, அதாவது ரங்கநாதன் நோக்கும் திக்காக (ரங்கதாம்னோ) அந்த ரங்க மந்திரமானது (விஸிஷ்யதே) விஶேஷமாக உள்ளது.

मक्षार्थी पापनिर्हारी प्रदक्षिणमथाचरेत् ।
तां दिशं तु समारभ्य रंगनाथं प्रणम्य च ।। ५

மோக்ஷார்த்தீ² பாபனிர்ஹாரீ ப்ரத³க்ஷிணமதா²சரேத் ।
தாம் தி³ஶம் ஸமாரப்⁴ய ரங்க³நாத²ம் ப்ரணம்ய ச ।। 5

(அத) இந்த ரங்க மந்திரம் (பாபனிர்ஹாரீ) பாபத்தை களைய (போக்க) வல்லதால் (மோக்ஷார்த்தீ) மோக்ஷத்தை விரும்பும் பக்தர்கள் (ப்ரதக்ஷிணம் ஆசரேத்) இதில் கூறிய வகையில் ப்ரதக்ஷிண உபாசனையை மேற்கொள்ள வேண்டும். (தாம் திஸம் து ஸமாரப்ய) அவ்வாறு இந்த ப்ரதக்ஷிணையை மேற்கொள்பவர்கள், இந்த தக்ஷிண திக்கிலிருந்து ஆரம்பத்து, (ச) மற்றும் (ரங்கநாதம் ப்ரணம்ய) ரங்கநாதனை நமஸ்கரித்து (ஸமாரப்ய) இந்த ப்ரதக்ஷிணையை சிறந்த பக்தி சிரத்தையுடனும், சுத்த மனத்துடனும் மேற்கொள்ள வேண்டும்.

विष्वक्सेन महाबाहो अनुज्ञां दातुमर्हसि ।
प्रदक्षिणार्थं देवस्य त्वां नमामि पुनः पुनः।। ६

விஷ்வக்ஸேன மஹாபா³ஹோ அனுஜ்ஞாம் தா³துமர்ஹஸி ।
ப்ரத³க்ஷிணார்த்த²ம் தே³வஸ்ய த்வாம் நமாமி புன: புன: ।।6

இந்த ப்ரதக்ஷிணையை செய்ய அருகதையை வேண்டி (மஹாபாஹோ) பெரிய கைகளை உடைய (விஷ்வக்ஸேனே) விஷ்வக்ஸேன என்னும் தேவதையை (அனுஜ்ஞாம் தாதுமர்ஹஸி) அவரின் ஆக்ஞையை பெறுவது உசிதமாகும். (தேவஸ்ய ப்ரதக்ஷிணார்த்தம்) அந்த ரங்கநாதனின் ப்ரதக்ஷிணையின் பொருட்டு (த்வாம் நமாமி புன: புன:) உங்களை மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கிறேன் என்று கூறி, நமஸ்கரித்து (த்வாம் அனுஜ்ஞாம் தாதுமர்ஹஸி) அந்த விஷ்வக்ஸேனரின் அருளை பெறுவது உசிதமாகும்.

पक्षीन्द्रानेन मंत्रेण प्रणम्य तदनुज्ञया ।
दिक्पालाय च कालाय जयाय विजयाय च ॥ ७

பக்ஷீந்த்3ரானேன மந்த்ரேண ப்ரணம்ய தத3னுஜ்ஞயா ।
தி3க்பாலாய ச காலாய ஜயாய விஜயாய ச ||7

(பக்ஷீந்த்ர) ஹே பக்ஷி ஸ்ரேஷ்டனான கருடனே (அனேன மந்த்ரேண) விஸ்வக்ஸேன மந்திரங்களைக் கூறி, (ப்ரணம்ய) அவரை நமஸ்கரித்து (தத் அனுஜ்ஞா) அந்த விஸ்வக்ஸேனரின் ஆஜ்ஞையை பெற்று (ச) அதே போல (திக்பாலாய) திக்பாலகர்களையும் நமஸ்கரித்து (காலாய) கால தேவதையையும் நமஸ்கரித்து (ஜயாய விஜயாய ச) ஜயவிஜயர்களையும் நமஸ்கரிக்க வேண்டும்.

वासुदेवाय श्रीभूम्यां चतुर्व्यूहाय शार्ङ्गिणे।
शक्त्यादि द्वादशभ्यश्च आत्मादि ब्रह्मरूपिणे ॥ ८

नमस्कृत्य च सर्वेभ्यो नैर्ऋतीं दिशमाव्रजेत् ।
तत्कणाधिपतिं देवं कुमुदं कुमुदाक्षकम् ॥ ९

வாஸுதே3வாய ஸ்ரீபூ4ம்யாம் சதுர்வ்யூஹாய ஶார்ங்கி3ணே
ஶக்த்யாதி3 த்3வாத3ஶப்4யஸ்வ ஆத்மாதி3 ப்3ரஹ்மரூபணே||8

நமஸ்க்ருத்ய ச ஸர்வேப்4யோ நைர்ருதீம் திஶமாவ்ரஜேத்
தத்கோணாதி4பதிம் தே3வம் குமுத3ம் குமுதா3க்ஷகம் || 9

(வாஸுதேவாய) வாஸுதேவனுக்காகவும் (ஸ்ரீபூம்யாம்) ஸ்ரீ மற்றும் பூதேவிகளையும் (சதுர்வ்யூஹாய) சதுர்வ்யூஹனையும் (ஸார்ங்கிணே) சாரங்கபாணி ஸ்வாமியையும் (ஶக்த்யாதி த்வாதஸப்யஸ்வ) ஶக்த்யாதி 12 நாமங்களையும் (ஆத்மாதி ப்ரஹ்மரூபணே) ஆத்மாவிலிருந்து ஆரம்பத்து, ப்ரஹ்ம ரூபணே என்பது வரையிலான மந்த்ரங்களையும் கூறி ( ஸர்வேப்யோ நமஸ்க்ருத்ய) இந்த எல்லா தேவதைகளையும் நமஸ்காரம் செய்து (ச) மற்றும் (நிர்ருதிம் திஸம் ஆவ்ரஜேத்) நிர்ருதி திக்கை நோக்கி ப்ரயாணிக்க வேண்டும். அதாவது, தென் மேற்கு திக்கை நோக்கி ப்ரயாணிக்க வேண்டும் என்று அர்த்தம். (தத் கோணாதிபதிம்) அந்த நிர்ருதி திக்கின் அதிபதியான (தேவம்) தேவதையையும் நிர்ருதாய நம: (குமுதம் குமுதாக்ஷகம்) குமுதாய நம: குமுதாக்ஷாய நம: என்ற மந்திரங்களால் நமஸ்கரித்து

रंगेशं च प्रणाम्याथ प्रतीचीं दिशमाव्रजेत् ।
ततः पर्जन्यदिक्पालमूर्तये ब्रह्मणे तथा ।। १०

ரங்கே3ஶம் ச ப்ரணம்யாத2 ப்ரதீசீம் தி3ஶமாவ்ரஜேத் ।
தத: பர்ஜன்யதி3க்பாலமூர்த்தயே ப்3ரஹ்மணே ததா2 || 10

முன்கூறியபடி இந்த நிர்ருதி திக்கை விட்டு (அத) பிறகு (ரங்கேஶம் ச ப்ரணம்ய) ரங்கேஶாய நம: என்று ரங்கநாதனையும் நமஸ்கரித்து, (ப்ரதீசிம் திஸம் ஆவ்ரஜேத்) ப்ரதீசி திக்கை நோக்கி நமஸ்கார ப்ரயாணத்தை தொடங்க வேண்டும். (தத:) பிறகு (ததா) முன்னால் குறிப்பிட்டவாறே (பர்ஜன்ய திக்பால மூர்த்தயே) பர்ஜன்ய திக்பாலக மூர்த்தியான வருணனை நமஸ்கரித்து (ப்ரஹ்மனே) ப்ரஹ்மனையும் நமஸ்கரித்து

पुष्कराय च कालाय पुष्कराक्षाय ते नमः ।
ततो वायुदिशं गत्वा तत्कणे वायवे नमः ।।११

புஷ்கராய ச காலாய புஷ்கராக்ஷாய தே நம: ।
ததோ வாயுதி$^3$ஶம் க$^3$த்வா தத்கோணே வாயவே நம: ।।11

(ததா) அவ்வாறே (புஷ்கராய) புஷ்கரனையும் நமஸ்கரித்து (ச) மற்றும் (காலாய) கால தேவதையையும் நமஸ்கரித்து (புஷ்கராக்ஷாய தே நம:) புஷ்கராக்ஷனையும் நமஸ்கரித்து (ததோ) அங்கிருந்து (வாயுதிஶம் கத்வா) வாயு திசையை நோக்கி, வடமேற்கு திசையை நோக்கி (கத்வா) நகர்ந்து (தத்கோணே) அந்த கோணத்தில் (வாயவே நம:) வாயுவை நமஸ்கரித்து (ச) மற்றும்

गरुडाय च दुर्गायै सरस्वत्यै नमः ।
उत्तरद्वारि पक्षीन्द्र रंगेशं प्रणमेद् बुधः ।। १२

க$^3$ருடாய ச து$^3$ர்கா$^3$யை ஸரஸ்வத்யை நம: ।
உத்தரத்$^3$வாரி பக்ஷீந்த்$^3$ர ரங்கே$^3$ஶம் ப்ரணமேத் பு$^3$த$^3$: ।।12

(புத:) ஞானிகளான இந்த மேற்கொள்ளும் பக்தர்கள் (கருடாய) கருடனையும் நமஸ்கரித்து (ச) மற்றும் (துர்காயை சரஸ்வத்யை நம;) துர்கா தேவியையும், சரஸ்வதியையும் நமஸ்கரித்து, அவ்வாறே ஜகத்கர்தாவான ரங்கநாதனையும் நமஸ்கரித்து (உத்தரத்வாரீ) வடக்கு த்வாரத்தின் அதிபதியான (பக்ஷீந்த்ர) கருடனையும், (ரங்கேஶம் ப்ரணமேத்) ரங்கேஶனையும் நமஸ்கரித்து

दिक्पालाय कुबेराय गणाधिपतये तथा ।
शार्ङ्गिणे वासुदेवाय श्रीनिवासाय वै नमेत् ।। १३

தி$^3$க்பாலாய குபே$^3$ராய க$^3$ணாதி$^4$பதயே ததா$^2$ ।
ஶார்ங்கி$^3$ணே வாஸுதே$^3$வாய ஶ்ரீனிவாஸாய வை நமேத் ।।13

(திக்பாலாய குபேராய) திக்பாலகனான குபேரனையும் (ததா) அவ்வாறே (வை) ப்ரஸித்தமான (கணாதிபதயே) கண தேவதையின் அதிபதியையும் (சார்ங்கிணே) சாரங்கபாணி ஸ்வாமிக்காகவும் (வாஸுதேவாய) வாஸுதேவனுக்காகவும் (ஸ்ரீனிவாஸாய) ஸ்ரீனிவாஸனுக்காகவும் (நமேத்) நமஸ்காரம் செய்ய வேண்டும்.

तत ईशानदिग्भाग ईशानं प्रणमेच्च वै ।
इंद्रचंद्रमसं चैव बलं च प्रबलं तथा ।। १४

தத ஈஶானதி³க்³பா⁴க³ ஈஶானம் ப்ரணமேச்ச வை ।
இந்த்³ரசந்த்ரமஸம் சைவ ப³லம் ச ப்ரப³லம் ததா² ।।14

(ததः) பிறகு (ஈஶான திக்பாக ஈஶானம்) ஈஶான திக்கின் அதிபதியான ஈஶான தேவதையை (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும் (ச) மற்றும் (வை) இவ்வாறே ஈஶான திக்கிற்கு ப்ரஸித்தமான சம்பந்தம் பெற்ற (இந்த்ரசந்த்ரமஸம்) இந்த்ரன் மற்றும் சந்த்ரர்களையும் (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும் (ச) மற்றும் (ஏவ) இவ்வாறே அந்த திக்கிற்கு சம்பந்தப்பட்ட (பலம் ச ப்ரபலம் ச) பல ப்ரபலர்களை (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும்.

रंगेशं च नम ब्रह्मन् सर्वाभीष्टप्रदायम् ।
ततः पूर्वदिशं गत्वा तत्कणे द्वारि वै नमेत् ।। १५

ரங்கே³ஶம் ச நமோ ப்³ரஹ்மன் ஸர்வாபீ⁴ஷ்டப்ரதா³யம் ।
தத: பூர்வதி³ஶம் க³த்வா தத்கோணே த்³வாரி வை நமேத் ।।15

(ததா) அவ்வாறே (ஸர்வாபீஷ்ட ப்ரதாயம்) ஸர்வாபீஷ்டங்களையும் தரவல்ல (ப்ரஹ்மன்) சர்வகுண பூர்ணனான (ரங்கேஶம்) ரங்கநாதனையும்கூட, ரங்கேஶாய நம: என்ற மந்திரத்தை சொல்லி நமஸ்கரிக்க வேண்டும். (ச) மற்றும்

ஒவ்வொரு திக்பாலகர்களையும்கூட நமஸ்கரிக்க வேண்டும். (தத: பூர்வதிஶம் கத்வா) அங்கிருந்து பூர்வ திக்கை நோக்கி ப்ரதக்ஷிண ப்ரயாணத்தை மேற்கொண்டு (தத் கோணே த்வாரி) அந்த கோண த்வாரத்தின் வழியாக சென்று (வை) ப்ரபலமாக, அந்த பூர்வ திக்கில் உள்ள திக்பாலகர்களை (நமேத்) நமஸ்கரிக்க வேண்டும்.

दिक्पालाय सुरेन्द्राय नन्दाय च सुनंदाय च ।
हयशीर्ष्णे नृसिंहाय प्रणमेत्पक्षिणां वर ।। १६

தி³க்பாலாய ஸுரேந்த்³ராய நந்தா³ய ச ஸுனந்தா³ய ச ।
ஹயஶீர்ஷ்ணே ந்ருஸிம்ஹாய ப்ரணமேத்பக்ஷிணாம் வர ।।16

(ததா) அவ்வாறே (திக்பாலாய) திக்பாலகர்களுக்கும் (ஸுரேந்த்ராய) இந்திரனுக்கும் (ச) மற்றும் (நந்தாய) நந்தனுக்கும் (ஸுனந்தாய) ஸுனந்தாவிற்கும் மற்றும் (ஹயஸீர்ஷ்ணே) குதிரை முகம் உடையவருக்கும் (ந்ருஸிம்ஹாய) ந்ருஸிம்ஹ ரூப பரமாத்மனுக்கும் (பக்ஷிணாம் வர) பக்ஷி ஸ்ரேஷ்டனான கருடனுக்கும் (ப்ரணமேத்) நமஸ்காரம் செய்ய வேண்டும்.

तत आग्नेयकणे तु अग्नये प्रणमेद् बुधः ।
गरुडाय नमेद्देव ईशानाय नमेत्तथा ।। १७

தத ஆக்³னேயகோணே து அக்னயே ப்ரணமேத் பு³த³: ।
க³ருடா³ய நமேத்தேவ ஈஶானாய நமேத்ததா² ।। 17

(தத:) பிறகு (ஆக்னேயகோணே து) தென் கிழக்கு மூலையில் (அக்னயே நம:) என ஆரம்பத்து (புத:) ஞானிகள் (ப்ரணமேத்) நமஸ்காரம் செய்ய வேண்டும் என்பதை தெரிவிக்கின்றனர். (ததா) அவ்வாறே, அந்த ஆக்னேய

மூலையில் (கருடாய) கருடாய நம: (ஈஸானாய) ஈஸானாய நம: (இத்யேவ) என்னும் க்ரமத்தை அனுசரித்து (நமேத்) நமஸ்கரிக்க வேண்டும்.

अश्विभ्यां पद्मनाभाय क्रमेण प्रणमेद् बुधः ।
ततो दक्षिणदिग्भागे यमाय प्रणमेदथ ।। १८

அஶ்விப்$^{4}$யாம் பத்$^{3}$மனாபா$^{4}$ய க்ரமேண ப்ரணமேத்$^{3}$ பு$^{3}$த$^{3}$: ।
ததோ த$^{3}$க்ஷிணதி$^{3}$க்$^{4}$பா$^{4}$கே$^{3}$ யமாய ப்ரணமேத$^{3}$த$^{2}$ ।।18

(ததா) அவ்வாறே (புத:) ஞானிகள் (அஸ்விப்யாம்) அஸ்விப்யாம் நம: எனவும் (பத்மனாபாய) பத்மனாபாய நம: எனவும் (க்ரமேண) க்ரமத்தை அனுசரித்து (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும் என்பதை தெரிவிக்கின்றனர். (அத ததோ) அங்கிருந்து முன் நகர்ந்து, (தக்ஷிணதிக்பாகே) தக்ஷிண திக் பாகத்தில் (யமாய) யமாய நம: என ஆரம்பித்து (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும்.

कीर्त्यै स्फूर्त्यै च मायायै रमाय प्रणमेत्तथा ।
विभीषणाय च नमेदेवं वै प्रणमेद् बुधः ।। १९

கீர்த்யை ஸ்பூ$^{2}$ர்த்யை ச மாயாயை ரமாய ப்ரணமேத்ததா$^{2}$
விபீ$^{4}$ஷணாய ச நமேதே$^{3}$வம் வை ப்ரணமேத் பு$^{3}$த$^{3}$: 19

(ச) மற்றும் (கீர்த்யை) கீர்த்யை நம: (ஸ்பூர்த்யை) ஸ்பூர்த்யை நம: (மாயாயை) மாயாயை நம: (ரமாய) ரமாயை நம: என (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும் (ததா) அவ்வாறே (விபீஷணாய) விபீஷணாய நம: என்றவாறும் (ச) மற்றும் (வை) ப்ரஸித்தமான (தேவம்) ரங்கநாதனை (ப்ரணமேத்) நமஸ்கரிக்க வேண்டும். (ஏவம்) இவ்வாறு எட்டு இடங்களிலும் குறிப்பட்ட அந்த நாமத்துடன் கூடிய (ப்ரணமேத்) தனித்தனி நமஸ்காரங்களை செய்ய வேண்டும் என (புத:) ஞானிகள்

தெரிவிக்கின்றனர். இவ்வாறாக எட்டு இடங்களிலும் நமஸ்கரித்தால், ஒரு ப்ரதக்ஷிணம் முடிவுக்கு வருகிறது.

पूर्ववत्सन्निधिं गत्वा तत्प्रीत्यै च समर्पयेत् ।
ततोऽन्तः प्रविशेत् प्राज्ञ अभिवादनपूर्वकम् ।। २०

பூர்வவத்ஸன்னிதி⁴ம் க³த்வா தத்ப்ரீத்யை ச ஸமர்ப்பயேத் ।
ததோண்ந்த: ப்ரவிஶேத் ப்ராஜ்ஞ அபவாத³னபூர்வகம் ।। 20

(பூர்வவத் ஸன்னிதிம் கத்வா) முன்பு கூறியதைப் போலவே, அடுத்த ப்ரகாரத்திற்கு சென்று, (தத்ப்ரீத்யை ச) அந்தந்த முன்னர் குறிப்பட்ட வகையிலான தேவதைகளை (ஸமர்ப்பயேத்) நன்றாக அர்ச்சனை செய்து (ததோண்ந்த: ப்ரவிஸேஷ் ப்ராஜ்ஞ:) அந்த ப்ரகாரத்தில் ப்ரவேசிக்கும் ஞானி (அபவாதன பூர்வகம்) பகவத் ஸ்மரணையுடன் கூடிய வந்தனங்களை தெரிவித்துக் கொண்டு

पूर्वोक्तेन क्रमेणैव गत्वा तत्र हरिं स्मरन् ।
द्वात्रिंशत्संख्यया देवं नमस्कुर्यात्तु नामभिः ।। २१

பூர்வோக்தேன க்ரமேணைவ க³த்வா தத்ர ஹரிம் ஸ்மரன் ।
த்வாத்ரிம்ஶத்ஸங்க்²யயா தெ³ய்வம் நமஸ்குர்யாத்து நாமப⁴: ।।21

(பூர்வோக்தேன க்ரமேணைவ) முன்பு கூறப்பட்டதைப் போல 8 இடங்களிலும் (கத்வா) சென்று, முன்பு கூறப்பட்ட வகையிலேயே நாமங்களைக் கூறி, நமஸ்காரங்களை செய்து (தத்ர ஹரிம் ஸ்மரண்) அந்த ஒவ்வொரு இடத்திலும் கூட, ஜகத் கர்தாவான ஸ்ரீஹரியை ஸ்மரணை செய்து கொண்டு (த்வாத்ரிம்ஸத் ஸங்க்யயா தேவம்) 32 பகவன் நாமங்களை ஸ்மரித்து (நாமபி: து) அந்த நாமங்களை கூறிக்கொண்டும் கூட (நமஸ்குர்யாத்) நமஸ்காரத்தை செய்ய வேண்டும்.

ततोन्तः प्रविशेद्देशं पूर्ववत्प्रणमेद् बुधः ।
चतुर्दिशं प्रणम्यैवं रंगेशं वीक्ष्य वार्प्य च ।। २२

ததோऽந்த: ப்ரவிஶேத்³தே³ஶம் பூர்வவத் ப்ரணமேத்³ பு³த³: ।
சதுர்தி³ஶம் ப்ரணம்யைவம் ரங்கே³ஶம் வீக்ஷ்ய வார்ப்ய ச ।।22

(ததோऽந்த: ப்ரவிஸேத் தேஶம்) இவ்வாறு உள்ளே ப்ரவேசித்து அந்த இடத்தில் (புத: பூர்வவத் ப்ரணமேத்) ப்ரதக்ஷிணையை மேற்கொள்பவர்கள் முன் கூறப்பட்ட வகையில் நமஸ்கரிக்க வேண்டும் என ஞானிகள் தெரிவிக்கின்றனர். (சதுர்திஶம் ப்ரணம்யைவ) நான்கு திக்குகளிலும் நமஸ்காரம் செய்து (ச) மற்றும் (ரங்கேஶம் வீக்ஷ்ய) ரங்கேஶனை தரிசித்து (ச) மற்றும் (வார்ப்ய) அவன் சரணாகதியையே வேண்டுபவனாகி...

पूजयित्वा यथाशक्ति गंधमाल्यानुलेपनैः ।
आचार्यं पूजयेत्भक्त्या वस्त्रगंधानुलेपनैः ।। २३

பூஜயித்வா யதாஶக்திம் க³ந்த⁴மால்யானுலேபனை: ।
ஆசார்யம் பூஜயேத்ப⁴க்த்யா வஸ்த்ரக³ந்தா⁴னுலேபனை: ।। 23

(யதாசக்தி) தன் சக்திக்கு ஏற்றாற்போல் (கந்தமால்ய அனுலேபனை:) கந்தம், புஷ்ப மாலை, இவற்றை சமர்ப்பித்து (பூஜயித்வா) பூஜை செய்து (பக்த்யா) பக்தி ஸ்ரத்தையுடன் (ஆசார்யம் பூஜயேத்) ஆசார்யரை பூஜித்து அவருக்கு (வஸ்த்ரகந்தானுலேபனை:) வஸ்த்ரம், கந்தம், ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

नूत्नं वस्त्रं प्रदातव्यं पित्रूणां तृप्तयोण्डज ।
जीर्णवस्त्रप्रदानेन पितरो यात्यसद्गतिम् ।। २४

நூத்னம் வஸ்த்ரம் ப்ரதா$^{3}$தவ்யம் பத்ருணாம்
த்ருப்தயேண்ண்ட$^{3}$ஜ ।
ஜீர்ணவஸ்த்ரப்ரதா$^{3}$னேன பதரோ யாத்யஸத்க$^{3}$திம் ॥ 24

(அண்டஜ) இந்த ப்ரம்ஹாண்டத்தை படைத்த பகவானின் பொருட்டு ப்ராஹ்மணருக்கு தர வேண்டிய தக்ஷிணையை கூறுகிறார் அல்லது அண்டஜ என்ற பதத்திற்கு கருடன் என்று அர்த்தம் செய்து, ஹே கருடனே என்று அர்த்தம் கூறலாம். (பித்ருணாம் த்ருப்தயே) பித்ருக்கள் த்ருப்தி ஆகும் பொருட்டு (நூத்னம் வஸ்த்ரம் ப்ரதாதவ்யம்) ஆசார்யருக்கு அல்லது ப்ராஹ்மணருக்கு புதிய வஸ்திரத்தை தானம் செய்ய வேண்டும் (ஜீர்ண வஸ்த்ர ப்ரதானேன) கிழிந்த வஸ்த்ரங்களையோ அல்லது உபயோகித்த வஸ்த்ரங்களையோ கொடுப்பதனால் (பிதரோ) பத்ருக்கள் (அஸத்கதிம் யாப்ய:) ஸத்கதிக்கு செல்வதில்லை.

उदकुंभः प्रदातव्य देवर्षिपितृतृप्तये ।
सुवर्णस्य प्रदानेन गयाश्राद्धफलं भवेत् ॥ २५

உதகும்ப$^{4}$: ப்ரதா$^{3}$தவ்யோ தே$^{3}$வர்ஷி பத்ருத்ருப்தயே ।
ஸுவர்ணஸ்ய ப்ரதா$^{3}$னேன க$^{3}$யாஸ்ரார்த்$^{3}$த$^{4}$ ப$^{2}$லம் ப$^{4}$வேத்॥25

(உதகும்ப: ப்ரதாதவ்யோ) உதுகும்ப தானத்தை அவசியம் செய்ய வேண்டும். எதற்காக என்றால், (தேவர்ஷி பித்ரு த்ருப்தயே) தேவ ரிஷி மற்றும் பித்ருக்களுக்கு திருப்தி செய்யும் பொருட்டு, இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணை முடிந்தபன், (ஸ்வர்ணஸ்ய ப்ரதானேன) ஸ்வர்ண தானம் செய்வதனால், (கயாஸ்ரார்த்த பலம் பவேத்) கயாவிற்கு சென்று ஸ்ரார்த்தம் செய்த பலனை அடைகிறான்.

सुमंगल्यैश्शूर्पयुग्मं दध्यान्मांगल्यसिद्धये ।
कुटुंबिनं भोजयीत ब्राह्मणं श्रोत्रियं शुचिः ॥ २६

ஸுமங்க$^{3}$ல்யைஶ்ஶூர்பயுக்$^{3}$மம் தத்$^{4}$யான்மாங்க$^{3}$ல்ய
ஸித்$^{3}$த$^{4}$யே ।
குடும்ப$^{3}$னம் போ$^{4}$ஜயீத ப்$^{3}$ராஹ்மணம் ஸ்ரோத்ரியம் ஶுசி: ||26

(ஸுமங்கல்யை ஶூர்பயுக்மம்) சுமங்கலிகளுக்கு மொறதபாயண என்னும் தானத்தை (தத்யான்) அவசியம் தரவேண்டும். இதனால் (மாங்கல்ய ஸித்தயே) தம்பதிகளுக்கு நீண்ட ஆயுளும், மாங்கல்ய ஸித்தியும் ஆகிறது. (குடும்பீனம் ப்ராஹ்மணம் போஜயீத) குடும்ப ஸகிதராகி, ப்ராஹ்மணருக்கு போஜனம் செய்வித்து (ஸ்ரோத்ரியம் ஷுசி:) அவரிடம் ரங்க மஹாத்ம்யத்தை கேட்டு அதனால், ஶுத்த ஹ்ருதயத்தை பெற வேண்டும்.

सप्तावरान् ब्राह्मणांश्च भजयेद्भक्तिपूर्वकम् ।
रात्रौ स्वपेद्भूमितले ब्रह्मचर्यव्रतं चरन् ।। २७

ஸப்தாவரான் ப்$^{3}$ராஹ்மணாம்ஸ்ச போ$^{4}$ஜயேத்
ப$^{3}$க்திபூர்வகம் ।
ராத்ரௌ ஸ்வபே$^{1}$த்பூ$^{4}$மிதலே ப்$^{3}$ரஹ்மசர்யவ்ரதம் சரன் ||27

(ஸப்த அவரான் ப்ராஹ்மணாம்ஸ்ச) ஏழு ஸ்ரேஷ்ட ப்ராஹ்மணர்களுக்கு அல்லது 'அவர' என்ற பதத்திற்கு சிறியவர் என்று அர்த்தம் செய்து, அதன் மூலம் 7 ப்ரஹ்மசாரிகள் என்றும் அர்த்தம் செய்யலாம். இவ்வாறாக, 7 ப்ராஹ்மணர்களுக்கோ அல்லது 7 ப்ரஹ்மசாரிகளுக்கோ (பக்திபூர்வகம்) பக்தி பூர்வகமாக (போஜயேத்) போஜனம் செய்விக்க வேண்டும் (ராத்ரௌ ஸபேத் பூமிதலே) இரவில் படுக்கையை துறந்து, பூமியிலேயே படுத்துக் கொண்டு (ப்ரஹ்மசர்ய வ்ரதம் சரன்) ப்ரஹ்மசர்ய அனுஷ்டானங்களை அனுஷ்டிக்க வேண்டும்.

एवं कृते पक्षिराज संपूर्ण फलमश्नुते ।
सर्वयज्ञेषु यत्पुण्यं सर्वतीर्थेषु यत्फलम् ॥ २८

ஏவம் க்ருதே பக்ஷிராஜ ஸம்பூர்ணம் ப²லமஶ்னுதே ।
ஸர்வயஜ்ஞேஷு யத்புண்யம் ஸர்வதீர்த்தே²ஷு யத்ப²லம் ॥ 28

(ஏவம் க்ருதே) இவ்வாறு கூறப்பட்ட வகையில், இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணையை செய்தவனான (பக்ஷிராஜ) கருட பகவான் (ஸம்பூர்ணம் பலமஸ்னுதே) முழு பலன்களை பெற்றவனானான். (ஸர்வயக்ஞேஷு யத்புண்யம்) எல்லா யாகங்களை செய்வதால், என்ன புண்ணியம் கிடைக்கிறதோ (ஸர்வ தீர்த்தேஷு யத்பலம்) எல்லா தீர்த்தங்களிலும் நீராடினால், என்ன பலன் கிடைக்கிறதோ...

सर्वदानेषु यत्पुण्यं तत्फलं भवति ध्रुवम् ।
पक्षान्ते विष्णुनक्षत्रे एकादश्यां च वैधृतौ ॥ २९

ஸர்வதா³னேஷு யத்புண்யம் தத்ப²லம் ப³வதி த்³ருவம் ।
பக்ஷாந்தே விஷ்ணு நக்ஷத்ரே ஏகாத³ஶ்யாம் ச வைத்⁴ருதௌ॥29

(ஸர்வதானேஷு யத்புண்யம்) எல்லா தானங்களையும் செய்தால் என்ன பலன்கள் கிடைக்கிறதோ (தத்பலம்) அந்த பலன் (த்ருவம் பவதி) இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணை செய்பவர்களுக்கு கண்டிப்பாக வருகிறது. இதை எப்போது செய்வது விஶேஷம் என்றால், (பக்ஷாந்தே) அமாவாசை மற்றும் பௌர்ணமிகளில் (விஷ்ணு நக்ஷத்ரே) ஸ்ரவண நக்ஷத்திரத்தில் (ஏகாதஸ்யாம்) ஏகாதசி அன்றும் (ச) மற்றும் (வைத்ருதௌ) வைத்ருக யோகம் உள்ள நாட்களிலும்...

जन्मर्क्षे यमनक्षत्रे पित्रुणां च दिने तथा ।
विशेषेण तुलामासे मृगोवरि तथांडज ॥ ३०

ஜன்மர்க்ஷே யமநக்ஷத்ரே பத்ருணாம் ச தி$^{3}$னே ததா$^{2}$ ।
விஶேஷேண துலாமாஸே ம்ருகோ$^{3}$வரி ததா$^{2}$ண்ட$^{3}$ஜ ।। 30

(ஜன்மர்க்ஷே) ஜன்ம நக்ஷத்திரத்திலும் (யம நக்ஷத்ரே) யமனின் நக்ஷத்திரத்திலும் (ச) மற்றும் (பித்ருணாம் தினே) பித்ருக்களின் தினத்திலும் (ததா) அவ்வாறே (விஸேஷேண துலாமாஸே) விஶேஷமாக துலா மாதத்திலும் (ததா) அவ்வாறே (அண்டஜ) கருடனே (ம்ருகோவரி) மார்கசீர்ஷ மாதத்திலும்...

प्रदक्षिणं तु यः कुर्यान्मृत्युपाशात्स मुच्यते ।
सप्तसागरपर्यन्त सप्तद्वीपवतीभुवः ।। ३१

ப்ரத$^{3}$க்ஷிணம் து ய: குர்யான் ம்ருத்யுபாஶாத்ஸ முச்யுதே ।
ஸப்தஸாக$^{3}$ர பர்யந்த ஸப்தத்$^{3}$வீபவதீபு$^{4}$வ: ।।31

(ப்ரதக்ஷிணம் து ய: குர்யாத்) யாரொருவன் இந்த ஸப்த ப்ரதக்ஷிணங்களை செய்கிறானோ (ம்ருத்யுபாஶாத்) ம்ருத்யுவின் பயத்திலிருந்து மற்றும் அபம்ருத்யு தோஷங்களில்ருந்து (ஸ: முச்யதே) அவன் விடுபடுகிறான். (ஸப்த ஸாகர பர்யந்த) ஏழு ஸமுத்ரங்களை அடைந்தவனாகி (ஸப்த த்வீபவதீபுவ:) ஸப்த த்வீபங்களையும் அடைந்ததான பலனைப் பெறுகிறான். அதாவது, ஸப்த ஸாகர யாத்ரா, ஸப்த த்வீப யாத்ரா என்பதான தேவதைகளுக்கு மட்டுமே ஸாத்தியமான மஹாயாத்திரை செய்த பலன் இதனால் கிடைக்கிறது என்று அர்த்தம்.

प्रदक्षिणेन यत्पुण्यं तत्पुण्यफलमाप्नुयात् ।
विध्याकाम लभेद्विध्यां धनकाम लभद्वनम् ।। ३२

ப்ரத$^{3}$க்ஷிணேன யத்புண்யம் தத்புண்யப$^{2}$லமாப்னுயாத் ।
வித்$^{4}$யாகாமோ லபே$^{4}$த்வித்$^{4}$யாம் த$^{4}$னகாமோ
லப$^{4}$த்$^{3}$த$^{4}$னம் ।। 32

(ப்ரதக்ஷிணேன யத்புண்யம்) இந்த ப்ரதக்ஷிணையினால் என்ன புண்ணியம் கிடைக்கிறதோ, (தத்புண்ய பலமாப்னுயாத்) அதன் முழு பலன்களையும் அடையப் பெறுவாயாக. (வித்யாகாமோ லபேத் வித்யாம்) சிறந்த வித்யையை பெற வேண்டும் என்ற விருப்பம் உள்ளவன், அந்த விரும்பிய வித்யையை அடைகிறான் (தனகாமோ லபேத் தனம்) ஐஸ்வர்யம் வேண்டும் என்று விருப்பம் உள்ளவனாகி செய்பவன், அந்த ஐஸ்வர்யத்தை அடைகிறான்.

पुष्टिकाम लभेत्पुष्टिं श्रीकामः श्रियमाप्नुयात् ।
कन्याकाम लभेत्कन्यां राज्यकामस्तु राज्यवान् ।। ३३

புஷ்டிகாமோ லபே[4]த்புஷ்டிம் ஶ்ரீகாம: ஶ்ரீயமாப்னுயாத் ।
கன்யாகாமோ லபே[4]த்கன்யாம் ராஜ்யகாமஸ்து ராஜ்யவான் ।।33

(புஷ்டிகாமோ லபேத் புஷ்டிம்) ஆரோக்யத்தை விரும்ப யார் இந்த ப்ரதக்ஷிணையை செய்கிறாரோ, அவருக்கு ஆரோக்யம் கிடைக்கிறது (ஶ்ரீகாம: ஶ்ரீயமாப்னுயாத்) ஐஸ்வர்யம் வேண்டி அல்லது லக்ஷ்மி கடாக்ஷம் வேண்டி, யார் இந்த ப்ரதக்ஷிணையை செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்த லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கிறது. (கன்யாகாமோ லபேத் கன்யாம்) சிறந்த கன்யாஸ்த்ரீ தனக்கு கிடைக்க வேண்டும் என்று அபலாஷா உள்ளவனுக்கு, இந்த ப்ரதக்ஷிணை செய்வதால், அத்தகைய சிறந்த கன்யா ப்ராப்தி ஆகிறது. (ராஜ்யகாமஸ்து ராஜ்யவான்) அவ்வாறே, ஒரு ராஜ்ஜியம் கிடைக்க வேண்டும் என்ற இச்சாவுடன் கூடி, இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணையை செய்தால், அந்த யோக்ய அதிகாரிக்கு ராஜ்ஜியம் கிட்டுகிறது.

प्रदक्षिणादिकालेषु मौनी रंगं स्मरेद् ध्रुवम् ।
भुक्त्वा न गच्छेत्सायान्हे मध्यान्हे नापरान्हके ।। ३४

ப்ரத$^3$க்ஷிணாதிகாலேஷு மௌனீம் ரங்க$^3$ம் ஸ்மரேத் த்$^4$ருவம் ।
பு$^4$க்த்வா ந கச்சே$^2$த்ஸாயான்ஹே மத்$^4$யான்ஹே
நாபரான்ஹகே ॥ 34

(ப்ரதக்ஷிணாதி காலேஷு) இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணம் செய்யும் வேளையில் (மௌனீ) மௌனத்தை அனுஷ்டித்து (த்ருவம் ரங்கம் ஸ்மரேத்) நிச்சயமாக ரங்கனை ஸ்மரிக்க வேண்டும். (ஸாயான்ஹே) மாலை வேளையிலும் (அபரான்ஹகே) இரவு வேளையிலும் (மத்யான்ஹே) மதியத்திலும் (புக்த்வ) உண்ட பிறகும் (ந கச்சேத்) இந்த ப்ரதக்ஷிணைக்கு செல்லக்கூடாது. ஆகவே, விடியற்காலையில், அன்ன பானாதிகளை செய்வதற்கு முன்பு மட்டுமே இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணை செய்ய வேண்டும்.

दुष्टसंगतिदुर्वृत्तदुर्लापजनवर्जितः ।
जलहस्तः स्वयं कुर्याद्वाचा ब्रह्म शनैर्वदन् ॥ ३५

து$^3$ஷ்டஸங்க$^3$தி து$^3$ர்வ்ருத்த து$^3$ர்லாபஜனவர்ஜித: ।
ஜலஹஸ்த: ஸ்வயம் குர்யாத்$^3$ வாசாப்ரஹ்ம ஶனைர்வத$^3$ன் ॥35

இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணை காலத்தில் மற்றும் அன்று முழுவதும் (துஷ்ட ஸங்கதி) துஷ்டமான காரியங்களுடன் தொடர்பை வைத்துக் கொள்ளுதல் அல்லது ஆசாரத்திற்கு விருத்தமான செயல்களை செய்தல் (துர்வ்ருத்த) சாஸ்த்ர விருத்தமான வகையில் பணம் சம்பாதித்தல் (துர்லாப ஜனவர்ஜித:) துஷ்ட காரியங்களில் ஈடுபடும் ஜனங்களையும் மற்றும் துஷ்ட வாக்ப்ரயோகம் செய்யும் ஜனங்களையும் முழுமையான விலக்க வேண்டும். (ஸ்வயம் ஜலஹஸ்த: குர்யாத்) கையில் நிர்மால்ய ஜலத்தை வைத்துக் கொண்டு (ப்ரஹ்ம வாசா ஶனைர் வதன்) பகவான் ஸ்ரீஹரியின் நாமஸ்மரணையை மெல்லிய ஓசையில் செய்து கொண்டோ அல்லது வேத மந்திரங்களை ஜபித்துக் கொண்டோ அல்லது விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை மெதுவாக சொல்லிக் கொண்டோ இந்த ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிணையை மேற்கொள்ள வேண்டும்.

न शूद्रभाषणं कुर्यान्नोच्छिष्टं स्वपदा स्पृशेत् ।
प्राकारणां भृगोवरि सपत्नीकः प्रदक्षिणम् ।। ३६

ந ஶூத்ரபா[4]ஷணம் குர்யான்னோச்சி[2]ஷ்டம் ஸ்வபதா[3] ஸ்ப்ருஶேத் ।
ப்ராகாராணாம் ப்[4]ருகோவரி ஸபத்னீக: ப்ரத[3]க்ஷிணம் ॥ 36

(ந ஸூத்ர பாஷணம் குர்யாத்) ப்ரதக்ஷிணம் செய்யும் காலத்திலும் மற்றும் அன்று முழுவதும், ஸூத்ரர்களிடம் என்ற பதத்திற்கு துஷ்ட ஆசாரங்களை விரும்ப செய்பவர்கள் என்று அர்த்தம் செய்வதே இங்கு சரி.. அவ்வாறு, துஷ்ட ஆசாரங்களை விருப்பத்துடன் செய்பவர்களிடம் பேசுவதை தவிர்க்க வேண்டும். தமிழில் 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்பதால் என்ன கூறுகிறார்களோ, அதையே இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். இங்கு ஸூத்ரன் என்ற பதத்திற்கு, ஸூத்ர ஜாதியை சேர்ந்தவன் என்று அர்த்தம் இல்லை. ஏனென்றால், ஸூத்ர ஜாதியை சேர்ந்தவர்களும் கூட, ஸப்த ப்ரதக்ஷிண உபாஸனை அவசியம் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் இங்கு இந்த பதத்திற்கு துஷ்ட ஆசரணை உள்ளவர் என்ற அர்த்தமே, முன்னர் குறிப்பிட்டதற்கு பொருந்துவதாக உள்ளது. மேலும், மோக்ஷமே முதலான இங்கு கூறப்பட்ட அனைத்து பலன்களும்கூட ஸூத்ரர்களுக்கும் உண்டு. ஆகவே, அர்த்தம் செய்வதை ஜாக்கிரதையாக முன்னுக்குப்பின் முரணின்றி இங்கு கையாள வேண்டும். (நோச்சிஷ்டம்) எச்சில் பதார்த்தங்களை ஸ்பர்ஶம் செய்யாமல் இருப்பதும் (ஸ்வபதா) கால்களை கூட (ந ஸ்ப்ருஷேத்) தொடாமல் இருக்க வேண்டும். (ப்ரகாராணாம் ப்ருகோவரி) ஏழு ப்ரகாரங்கள் முழுவதையும்கூட (ஸபத்னீக: ப்ரதக்ஷிணம்) ஸபத்னீகமாக ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

यः करोति स आप्नोति स्वर्गं मक्षं सुखानि च ।
किमन्यदिच्छसि श्रोत्रं तत्सर्वं वद सांप्रतम् ।। ३७

ய: கரோதி ஸ ஆப்னோதி ஸ்வர்க்க³ம் மோக்ஷம் ஸுகா²னி ச |
கிமன்யதி³ச்ச²ஸி ஸ்ரோதும் தத்ஸர்வம் வத³ ஸாம்ப்ரதம் || 37

(ய: கரோதி) இவ்வாறாக யாரொருவர் மேலே கூறப்பட்ட வகையில் ப்ரதக்ஷிணையை செய்கிறாரோ, அவர் (ஸ்வர்க்கம் மோக்ஷம் ஸுகானி ச) ஸ்வர்க்க, மோக்ஷ சுகங்களையும் (ஆப்னோதி) அடைகின்றார். (கிம் அன்யதி இச்சஸி ஸ்ரோது) வேறு கேட்க விரும்பும் அனைத்தையும்கூட (ஸாம்ப்ரதம்) முழுமையாக (தத்ஸர்வம் வத) அனைத்தையும் கூறுவாயாக. என ப்ரம்ஹா கூறி, கருடனுக்கு இந்த ஸ்ரீரங்க ப்ரகார ப்ரதக்ஷிண க்ரம விதியை கருட புராணத்தில் உபதேசித்துள்ளார்.

|| इति गारुडपुराणे श्रीरंगनाथ प्राकार प्रदक्षिण विधिः ||

இதி கருடபுராணே ஸ்ரீரங்கநாத ப்ராகார ப்ரதக்ஷிண விதி:||

இத்துடன் கருட புராணத்தில் கூறியபடி
ஸ்ரீரங்க நாத ஸப்த ப்ரகார ப்ரதக்ஷிண விதி முடிந்தது.||

நமஸ்காரத்திற்கான கருட புராண மந்திரங்கள் பின்வருமாறு:

I. தெற்கு பகுதியில்: (South)

1. திக்பாலாய நம:
2. காலாய நம:
3. ஜயாய நம:
4. விஜயாய நம:
5. வாஸுதேவாய நம:
6. ஸ்ரீயை நம:
7. பூம்யை நம:
8. சதுர்வ்யூஹாயை நம:
9. ஸார்ங்கிணே நம:
10. ஶக்த்யை நம:
11. ப்ரதிஷ்டாயை நம:
12. ஸம்வித்யை நம:
13. ஸ்பூர்த்யை நம:
14. ப்ரவ்ருத்யை நம:

15. காலாயை நம:
16. வித்யாயை நம:
17. மத்யாயை நம:
18. நித்யாயை நம:
19. மாயாயை நம:
20. காலாய நம:
21. புருஷாய நம:
22. ஆத்மனே நம:
23. அந்தராத்மனே நம:
24. பரமாத்மனே நம:
25. முக்யப்ராணாந்தர்கத ஞானாத்மனே நம:

II. தென் மேற்கு பகுதியில் : (South West)

1. நிரருதே நம:
2. குமுதாய நம:
3. குமுதாக்ஷாய நம:
4. முக்யப்ராணாந்தர்கத ரங்கேஶாய நம:

III. மேற்கு பகுதியில் : (West)

1. வருணாய நம:
2. ப்ரஹ்மணே நம:
3. புஷ்கராய நம:
4. கலாய நம:
5. முக்யப்ராணாந்தர்கத புஷ்கராக்ஷாய நம:

IV. வட மேற்கு பகுதியில் : (North west)

1. வாயவே நம:
2. கருடாய நம:
3. துர்காயை நம:
4. ஸரஸ்வத்யை நம:
5. முக்யப்ராணாந்தர்கத ஹ்ரியை நம:

V. வடக்கு பகுதியில்: (North)

1. ரங்கேஶாய நம:
2. குபேராய நம:

3. கணாதிபதயே நம:
4. ஸார்ங்கிணே நம:
5. வாஸுதேவாய நம:
6. முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீனிவாஸாய நம:

VI. வட கிழக்கு பகுதியில் : (North East)

1. ஈஶானாய நம:
2. இந்த்ராய நம:
3. சந்த்ரமஸே நம:
4. பலாய நம:
5. ப்ரபலாய நம:
6. முக்யப்ராணாந்தர்கத ரங்கேஶாய நம:

VII. கிழக்கு பகுதியில் : (East)

1. இந்த்ராய நம:
2. ஸுரேந்த்ராய நம:
3. நந்தாய நம:
4. ஸுனந்தாய நம:
5. ஹயஸீர்ஶணே நம:
6. முக்யப்ராணாந்தர்கத ந்ருஸிம்ஹாய நம:

VIII. தென் கிழக்கு பகுதியில் : (South East)

1. அக்னயே நம:
2. கருடாய நம:
3. ஈஶானாய நம:
4. அஸ்விப்யாம் நம:
5. முக்யப்ராணாந்தர்கத பத்மனாபாய நம:

IX. தெற்கு பகுதியில் : (South) (இரண்டாவது முறையாக)

1. யமாய நம:
2. கீர்த்யை நம:
3. ஸ்பூர்த்யை நம:
4. மாயாயை நம:
5. முக்யப்ராணாந்தர்கத விபீஷணாய நம:

X. தெற்கு பகுதியில் (South) ஏழாவது ப்ராகாரத்தின் முடிவில். கோபுரத்திற்கு முன்பாக.

1. கேஶவாய நம:
2. நாராயணாய நம:
3. மாதவாய நம:
4. கோவிந்தாய நம:
5. விஷ்ணவே நம:
6. மதுஸூதனாய நம:
7. த்ரிவிக்ரமாய நம:
8. வாமனாய நம:
9. ஶ்ரீதராய நம:
10. ஹ்ருஷிகேஶாய நம:
11. பத்மனாபாய நம:
12. தாமோதராய நம:
13. ஸங்கர்ஷணாய நம:
14. வாஸுதேவாய நம:
15. ப்ரத்யும்னாய நம:
16. அனிருத்தாய நம:
17. புருஷோத்தமாய நம:
18. அதோக்ஷஜாய நம:
19. ந்ருஸிம்ஹாய நம:
20. அச்யுதாய நம:
21. ஜனார்த்தனாய நம:
22. உபேந்த்ராய நம:
23. ஹரயே நம:
24. ஶ்ரீகிருஷ்ணாய நம:
25. விஶ்வாய நம:
26. தைஜஸாய நம:
27. ப்ரஜ்ஞாய நம:
28. துரியாய நம:
29. ஆத்மனே நம:
30. அந்தராத்மனே நம:
31. பரமாத்மனே நம:
32. ஞானாத்மனே நம:
33. முக்யப்ராணாந்தர்கத ரங்கேஶாய நம:

## ரங்க ஸ்தோத்ரம்

பத்மாதி ராஜே கருடாதி ராஜே
விரிஞ்ச ராஜே ஸுரராஜ ராஜே
த்ரைலோக்ய ராஜே அகிலராஜ ராஜே
ஸ்ரீரங்க ராஜே ரமதாம் மனோ மே || 1

நீலாப்ஜ வர்ணே புஜபூர்ண கர்ணே
கர்ணாந்த நேத்ரே கமலா களத்ரே
ஸ்ரீமல்லரங்கே ஜிதமல்ல ரங்கே
ஸ்ரீரங்க ரங்கே ரமதாம் மனோ மே || 2

லக்ஷ்மி நிவாஸே ஜகதாம் நிவாஸே
ஹ்ருத்பத்மவாஸே ரவிபிம்பவாஸே
க்ஷீராப்திவாஸே பணிபோகவாஸே
ஸ்ரீரங்கவாஸே ரமதாம் மனோ மே || 3

குபேரலீலே ஜகதேகலீலே
மந்தாரமாலாங்கித சாருபாலே
தைத்யாந்தகாலே அகில லோக மௌலே
ஸ்ரீரங்க லீலே ரமதாம் மனோ மே || 4

அமோக நித்ரே ஜகதேக நித்ரே
விதேஹ நித்ரேச ஸமுத்ர நித்ரே
ஸ்ரீயோக நித்ரே சுக யோக நித்ரே
ஸ்ரீரங்க நித்ரே ரமதாம் மனோ மே || 5

ஆனந்த ரூபே நிஜபோக ரூபே
ப்ரஹ்மஸ்வரூபே் க்ஷிதிமூர்த்தி ரூபே
விசித்ர ரூபே ரமணீய ரூபே
ஸ்ரீரங்க ரூபே ரமதாம் மனோ மே || 6

பக்தாக் க்ருதார்த்தே முரராவணாத்ரே
பக்த ஸமர்த்தே ஜகதேககீர்த்தே
அனேகமூர்த்தே ரமணீய மூர்த்தே
ஸ்ரீரங்க மூர்த்தே ரமதாம் மனோ மே || 7

கம்ஸப்ரமாதே நரக ப்ரமாதே
துஷ்ட ப்ரமாதே ஜகதாம் நிதானே
அனாத நாதே ஜகதேக நாதே
ஸ்ரீரங்க நாதே ரமதாம் மனோ மே || 8

ஸுசித்ரஷாயீ ஜகதேக ஷாயீ
நந்தாங்க ஷாயீ கமலாங்க ஷாயீ
அம்போதிஷாயீ வடபத்ர ஷாயீ
ஸ்ரீரங்கஷாயீ ரமதாம் மனோ மே || 9

ஸகலதுரிதபஹாரீ பூமிபாராபஹாரி
தஶமுக குலஹாரி தைத்ய தர்ப்பாபஹாரி
ஸுலலித க்ருதாசாரி பாரிஜாதாபஹாரி
த்ரிபுவனபயஹாரீ ப்ரியதாம் ஸ்ரீமுராரி || 10

ரங்கஸ்தோத்ரமிதம் புண்யம் ப்ராத: காலே படேன் நர: |
கோடி ஜன்மார்ஜிதம் பாபம் ஸ்மரணேன விநஶ்யதி ||

## இதி ஸ்ரீரங்க ஸ்தோத்திரம்

ரங்கநாதன நோடுவ ப³ன்னி
ரங்கநாதன நோடுவ ப³ன்னி - ஸ்ரீ (பல்லவி)
ரங்கன திவ்ய விமானதல்லிஹன (அனுபல்லவி)

கமனீய காத்ரன கருணாந்தரங்கன
காமிதார்த்தவீவ கல்ப வ்ருக்ஷன
கமலதள நேத்ரன கஸ்தூரி ரங்கன
காமதேனு காவேரி ரங்கன || 1

வாஸுகீ ஶயனன வாரிதி நிலயன
வாஸுதேவ வாரிஜ நாபன
வாஸவாதி பக்த ஹ்ருதயாம்புஜதல்லி
வாஸவாகிருதிஹ வாஸுதேவ ஸுதன ||2

மங்கள காத்ரன மஞ்ஜுள பாஷன
கங்கா ஜனக அஜ ஜனகன
ஸங்கீத லோலன ஸாது ஸம்மதன
ரங்க விட்டல ராஜீவ நேத்ரன

★★★



## छान्दोम्योपनिषत् (6/2)



सदेव सोम्य इदमग्रे आसीत् ।
एकमेव अद्वितीयम् ।
तदैक्षत बहु स्यां प्रजायेयेति ।
त्रीण्येव बीजानि । सेयं देवतैक्षत।
तासां त्रिवृत्तं । एकैकां करवाणी इति ।

1. காரணம் என்பது எது?
அவசியம் காரியத்திற்கு முன் இருப்பது.

2. இந்த ஜகத்தின் உற்பத்திக்கு முன் இருந்தது எது?
सदेव सौम्य इदमग्रे आसीत्। ஹே ஸோமபாணத்திற்கு அர்ஹனான ஸ்வேதகேதுவே ஸத் என்ற விஷ்ணுவே முதலில்=ப்ரளத்தில் இருந்தார்.

3. सदेव என்பதிலுள்ள एव ஶப்தம் என்ன கூறுகிறது?
அந்த ஸத் எனும் பதத்தால் தெரிவிக்கப்படும் ஸர்வோத்தமன் என்ற வகையில் விஷ்ணு ஒருவரே இருந்தார் என கூறுகிறது. மற்ற எவரும் ஸத் என்றவாறு இல்லை

4. एकमेव எனும் பதம் கூறுவது என்ன?
அந்த ஸத் என்ற விஷ்ணு ஸ்வகத பேத வர்ஜிதா என கூறுகிறது.

5. अद्वितीयम् எனும் பதம் கூறுவது என்ன?
அந்த ஸத் என்ற விஷ்ணுவுக்கு சமமானவரோ, அவரை விட உயர்ந்தவரோ யாரும் இல்லை என கூறுகிறது. எந்த வகையிலும் அவர் இரண்டாவது என ஆகுவதில்லை என்பதை தெரிவிக்கிறது.

6. உபநிஷத் ஸத் என கூறுவதால் என்ன ரஹசியத்தை கூறுகிறது?
விஷ்ணு ஸர்வோத்தமன் என்பதே இதன் பொருள். அவ்வாறு கூறியதால் மற்ற பலரும் உள்ளனர் ஆனால் அவர்கள் யாரும் அவரைபோல் ஸர்வோத்தமர் அல்ல என்பதை தெரிவிக்கிறது. இதனால் அத்வைதிகள் கூறும் ஜீவேஸ்வர ஐக்யம் நிராகரிக்கப்பட்டு, பேதம் ஸத்யம் என்பதையும் உறுதி செய்கிறது.

7. உற்பத்தி என்பதின் நான்கு வகைகள் எவை?
அதில் மூன்று எவ்வாறு நிராகரிக்கப்படுகிறது?
(a) சூன்யம் அல்லது ப்ராக் அபாவமே ஜகத் காரணம் என்பது
(b) ஜடபதார்த்தங்கள் தாமாகவே Naturally எல்லாவற்றிற்கும் காரணம் என்பது.
(c) ஒரு சேதனின் ஸாமர்த்தியமே எல்லாவற்றிற்கும் காரணம் என்பது.
(d) கற்பனையினால் உருவானது Super impose என்பது.
ஸத் என கூறியதாலேயே சூன்யம் இல்லை. तदैक्षत என்பதால் Naturally என்பது இல்லை. ஸ்ருஷ்டி க்ரமத்தை கூறியதால் கற்பனை இல்லை. Procedures are against imagination. செய்முறைகளை கற்பனை செய்ய இயலாது. அதனாலேயே செய்முறைகளை Practical என்கின்றனர்.

Tiger Printers,Srirangam,Cell:9585381567